සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

කර්ණාටක සංගීතය I
கர்நாடக சங்கீதம் I
Carnatic Music I

55 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**கவனிக்க:**

- ❋ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❋ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ❋ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
- ❋ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. 'ராதா வதன' என்ற அஷ்டபதி அமைந்துள்ள இராகம்
(1) மோகனம் (2) மத்யமாவதி (3) கரஹரப்ரியா
(4) கமாஸ் (5) நாட்டைக் குறிஞ்சி

2. விவாதி தோஷத்திற்கு **உட்படாத** மேளங்களின் எண்ணிக்கை
(1) 24 (2) 31 (3) 32 (4) 36 (5) 40

3. 'ஸரஸுட' என்னும் ஆதிதாள வர்ணத்தின் சாகித்தியம் அமைந்துள்ள மொழி
(1) கன்னடம் (2) தெலுங்கு (3) சமஸ்கிருதம் (4) தமிழ் (5) மலையாளம்

4. "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்..." என்று தன் தேவார வரிகளில் பாடியவர்
(1) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் (2) சுந்தரமூர்த்தி நாயனார்
(3) காரைக்கால் அம்மையார் (4) திருநாவுக்கரசு நாயனார்
(5) மாணிக்கவாசகர்

5. கர்நாடக இசையில் பயன்படுத்தப்படும் மேலைத்தேய வாத்தியங்கள்
(1) தபேலா, கிளாரினெட் (2) கெஞ்சிரா, மெண்டலின்
(3) சக்ஸபோன், மெண்டலின் (4) முகர்சிங், கிளாரினெட்
(5) கடம், சக்ஸபோன்

6. புலுத விராமம் எடுத்துக்கொள்ளும் மொத்த அட்சரகால எண்ணிக்கை
(1) 10 (2) 12 (3) 13 (4) 14 (5) 16

7. தவில் வாத்தியத்தில் வார்களை நுழைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள துவாரங்கள்
(1) 10 (2) 11 (3) 12 (4) 13 (5) 14

8. 'ஸ்வாமி நானுன்றன் அடிமை' - என்ற பதவர்ணத்தின் சாகித்தியம் குறிக்கும் தெய்வம்
(1) நடராஜர் (2) முருகன் (3) பிள்ளையார் (4) கிருஷ்ணர் (5) இராமர்

9. கடபயாதி சக்கர அமைப்பில் அடங்கியுள்ள பிரிவுகள்
(1) 3 (2) 4 (3) 5 (4) 6 (5) 7

10. ஓர் இராகத்தில் அரசனுக்குச் சமமாக வரும் ஸ்வரம்
(1) வாதி (2) சம்வாதி (3) விவாதி (4) அனுவாதி (5) கிரகம்

11. அஸம்பூர்ண மேள பத்ததியில் சாமரம் என்று அழைக்கப்படும் இராகத்தின் தாய் ராகம்
(1) பந்துவராளி (2) கரஹரப்ரியா (3) ஷண்முகப்ரியா (4) ஹரிகாம்போஜி (5) தோடி

12. இலட்சண கீதத்தின் மூன்று பிரிவுகளாவன
(1) இராகாங்க கண்டம், ஜன்னிய கண்டம், உபாங்க கண்டம்
(2) சூத்திர கண்டம், உபாங்க கண்டம், பாஷாங்க கண்டம்
(3) பாஷாங்க கண்டம், சாயாலக கண்டம், சங்கீரண கண்டம்
(4) சுத்த கண்டம், இராகாங்க கண்டம், சாயாலக கண்டம்
(5) சூத்திர கண்டம், உபாங்க கண்டம், வக்ர கண்டம்

[பக். 2 ஐப் பார்க்க

13. பூர்வி, பீலு போன்ற ஹிந்துஸ்தானி இராகங்களை உருவாக்கியவர்
(1) தான்சேன் (2) அமிர் குஸ்ரு
(3) ஸ்வாதித்திருநாள் மகாராஜா (4) பாக்
(5) ஸாகிர் ஹுசைன்

14. ஜன்னிய இராகத்தின் இதர பிரிவுகளுள் சாஸ்திர ரீதியில் அமைந்த இலட்சணத்துடன் விளங்குவது
(1) த்விதீய கனபஞ்சக இராகம் (2) கனபஞ்சக இராகம் (3) சாயாலக இராகம்
(4) சங்கீரண இராகம் (5) சுத்த இராகம்

15. 'தஞ்சம் என்றாலே' எனும் ஆபோகி இராக வர்ணத்தை இயற்றியவர்
(1) கொத்தவாசல் வெங்கட ராமய்யர் (2) வீணை குப்பய்யர் (3) பாபநாசம் சிவன்
(4) இராமநாதபுரம் ஸ்ரீனிவாச ஐயங்கார் (5) டைகர் வரதாச்சாரியார்

16. புன்னாகவராளி இராகத்தின் ஆரோகணம் ஆரம்பிக்கும் ஸ்வரம்
(1) மத்தியஸ்தாயி ஸட்ஜம் (2) மந்திரஸ்தாயி தைவதம்
(3) மந்திரஸ்தாயி பஞ்சமம் (4) மந்திரஸ்தாயி நிஷாதம்
(5) மத்தியஸ்தாயி ரிஷபம்

17. 'வலசி வச்சி' என்னும் நவராகமாலிகா வர்ணத்தின் சரணத்தில் எத்துக்கடைப் பல்லவி அமைந்துள்ள இராகம்
(1) கல்யாணி (2) பேகட (3) காம்போஜி
(4) யதுகுலகாம்போஜி (5) பிலஹரி

18. ஆரோகண, அவரோகணத்தில் அன்னிய ஸ்வரத்தை எடுத்துக் **கொள்ளாத** பாஷாங்க இராகம்
(1) ஸ்ரீராகம் (2) பிலஹரி (3) முகாரி (4) பைரவி (5) சாரங்கா

19. "தந்தோம் தந்தோமென்றாடிய பாதா" இவ்வரியில் தந்தோம் என்ற பதம்
(1) சொற்கட்டு ஸாகித்யம் (2) மகுட ஸாகித்யம் (3) சொற்கட்டு ஸ்வரம்
(4) ஸ்வர ஸாகித்யம் (5) மத்திமகால ஸாகித்யம்

20. வகுளாபரணம், தோடி, நடபைரவி ஆகிய இராகங்களின் சாயல்களைத் தோற்றுவிக்கும் இராகம்
(1) முகாரி (2) சாரங்கா (3) ஆஹிரி (4) தன்யாசி (5) ஹிந்தோளம்

21. பின்வருவனவற்றுள் உபய வக்ர இராகமாகக் கருதப்படுவது
(1) சாரங்கா (2) கமாஸ் (3) பேகட
(4) ஸ்ரீ இராகம் (5) ஸஹானா

22. 72 மேளகர்த்தா சக்கரத்தில் 3ஆவது, 9ஆவது சக்கரங்களில் வரும் ரிஷபமும் காந்தாரமும்
(1) சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம் (2) சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம்
(3) சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம் (4) சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம்
(5) சுத்த ரிஷபம், சாதாரண காந்தாரம்

23. கானடா இராகத்தில் அமைந்த 'நெரநம்மி' என்னும் அடதாள வர்ணத்தில் சரண ஸ்வரங்கள் ஆரம்பிக்கும் ஸ்தானங்கள் முறையே
(1) த, ரி, ஸ், ஸ் (2) ஸ், ஸ், ரி, த (3) ரி, ஸ், ஸ், த
(4) ஸ், ஸ், த, ரி (5) ரி, த, ஸ், ஸ்

24. பல்லவி பாடும் முறையில் பயன்படுத்தப்படும் மார்க்கங்கள்
(1) தட்சிண மார்க்கம், சித்திர மார்க்கம், அதி சித்திர மார்க்கம்
(2) தட்சிண மார்க்கம், வார்த்திக மார்க்கம், சித்திர மார்க்கம்
(3) தட்சிண மார்க்கம், வார்த்திக மார்க்கம், அதி சித்திர மார்க்கம்
(4) சித்திர மார்க்கம், அர்த்தச் சித்திர மார்க்கம், அதி சித்திர மார்க்கம்
(5) வார்த்திக மார்க்கம், சித்திர தரமார்க்கம், அதி சித்திர மார்க்கம்

25. F - SHARP என்ற மேலைத்தேய குறியீட்டுக்கு ஒப்பான கர்நாடக இசையின் ஸ்வரஸ்தானம்
(1) சுத்த மத்யமம் (2) சுத்த தைவதம் (3) பிரதி மத்யமம்
(4) கைசிகி நிஷாதம் (5) காகலி நிஷாதம்

26. தெலுங்குப் பதங்களை இயற்றியவர்கள்
(1) ஷேத்ரக்ஞர், பரிமளரங்கர், முத்துத்தாண்டவர்
(2) கனம் கிருஷ்ணய்யர், கஸ்தூரிரங்கர், சுப்பராம ஐயர்
(3) கஸ்தூரிரங்கர், கவிக்குஞ்சர பாரதி, சுப்பராம ஐயர்
(4) ஷேத்ரக்ஞர், பரிமளரங்கர், சாரங்கபாணி
(5) பரிமளரங்கர், சாரங்கபாணி, மாம்பழக்கவிராயர்

[பக். 3 ஐப் பார்க்க

27. 'வங்கியம்' எனப்படும் வாத்தியம்
(1) ஷெனாய் (2) சங்கவாத்தியம் (3) முகவீணை (4) நாதஸ்வரம் (5) புல்லாங்குழல்

28. பிருடைகள் என்னும் பாகம் அமைந்த வாத்தியங்கள்
(1) நாதஸ்வரம், வீணை, தம்புரா (2) தம்புரா, வீணை, வயலின்
(3) நாதஸ்வரம், தம்புரா, கோட்டுவாத்தியம் (4) வயலின், கோட்டுவாத்தியம், நாதஸ்வரம்
(5) கோட்டுவாத்தியம், தம்புரா, தவில்

29. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - வட இந்திய இசையில் பிரதான பக்கவாத்தியம்
B - மெட்டுகளைக் கொண்டிருக்கும் வாத்தியம்
C - கதக் நடனத்திற்குப் பக்கவாத்தியமாக வாசிக்கப்படும் வாத்தியம்
D - அனுதாபத் தந்திகளைக் கொண்டிராத வாத்தியம்
E - வில் போட்டு வாசிக்கப்படும் வாத்தியம்
மேற்குறித்தவற்றுள் ஸாரங்கி வாத்தியத்திற்குப் பொருத்தமான கூற்று/கூற்றுகள் எது/எவை ?
(1) A, B, D ஆகியன (2) A, C, D ஆகியன (3) A, C, E ஆகியன (4) A, D, E ஆகியன (5) B, D, E ஆகியன

30. பரிவு சுரத்தந்திகள் (Sympathetic Strings) காணப்படும் வாத்தியம்
(1) வீணை (2) கோட்டுவாத்தியம் (3) கிற்றார் (4) தம்புரா (5) வயலின்

31. மைசூர் வாஸுதேவாச்சாரியாரின் தாய்மொழி
(1) தமிழ் (2) மராட்டி (3) தெலுங்கு (4) மலையாளம் (5) கன்னடம்

32. யௌவன தேவாரம் என்றழைக்கப்படும் பாடல்களைப் பாடியவர்
(1) சுந்தரமூர்த்தி நாயனார் (2) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
(3) திருநாவுக்கரசு நாயனார் (4) மாணிக்கவாசக சுவாமிகள்
(5) அருணகிரிநாதர்

33. வீணையின் மூலாதாரம் என்று கருதப்படும் பாகம்
(1) நாகபாசம் (2) நாதவட்டம் (3) லங்கர் (4) யாளிமுகம் (5) குதிரை

34. கிருதியை அலங்கரிக்கும் அணிகளுள் தாது சம்பந்தமான அணிகள்
(1) மத்யமகால ஸாகித்யம், ஸ்வராட்சரம்
(2) யமகம், மணிப்பிரவாளம்
(3) ஸ்வர ஸாகித்யம், மத்யமகால ஸாகித்யம்
(4) ஸ்வர ஸாகித்யம், சொற்கட்டு ஸாகித்யம்
(5) சொற்கட்டு ஸாகித்யம், மத்யமகால ஸாகித்யம்

35. அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பட்ட ஈழத்துத் திருத்தலங்கள்
(1) நல்லூர், திருக்கோணேஸ்வரம் (2) கதிர்காமம், திருக்கோணேஸ்வரம்
(3) நல்லூர், வெருகல் (4) முன்னேஸ்வரம், கதிர்காமம்
(5) திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம்

36. ம, ப, த ஆகிய ஸ்வரங்களை கிரகபேதம் செய்யும்போது ஹேமவதி, வகுளாபரணம், கோசலம் ஆகிய இராகங்களைத் தோற்றுவிக்கும் இராகம்
(1) கரஹரப்ரியா (2) கீரவாணி (3) ஷண்முகப்ரியா (4) சங்கராபரணம் (5) பந்துவராளி

37. கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை ஆகிய இரு இசை வகைகளுக்கும் பொதுவான உருப்படிகள்
(1) தில்லானா, கிருதி (2) ஜாவளி, கீர்த்தனை (3) தில்லானா, ஜாவளி
(4) தில்லானா, கீர்த்தனை (5) கிருதி, பதம்

38. நவரோஜ் இராகத்தின் ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் பண்கள்
(1) காந்தார பஞ்சமம், காந்தாரம், கொல்லி, பியந்தைக் காந்தாரம்
(2) கொல்லி, செவ்வழி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம்
(3) செவ்வழி, காந்தாரம், சீகாமரம், கொல்லி
(4) காந்தார பஞ்சமம், காந்தாரம், சீகாமரம், கொல்லி
(5) காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கொல்லி, கொல்லிகௌவாணம்

39. தியாகராஜ ஸ்வாமிகளின் தெலுங்கு மொழியிலமைந்த நௌகா சரித்திரத்தை தமிழில் மொழிபெயர்த்தவர்
(1) பாபநாசம் சிவன் (2) கனம் கிருஷ்ணய்யர் (3) பி. சாம்பமூர்த்தி
(4) வீரமணி ஐயர் (5) ஊத்துக்காடு வெங்கட சுப்பையர்

40. ஓர் இசை உருப்படியின் பொருத்தமான இடத்தில் அந்த சாகித்தியத்தின் இராகபாவம், பொருள்நயம் விளங்கும்படியாகப் பல்வேறு பிரஸ்தாரங்களில் பாடப்படும் மனோதர்மப் பகுதி
(1) இராகம் (2) தானம் (3) பல்லவி (4) நிரவல் (5) கற்பனாஸ்வரம்

[பக். 4 ஐப் பார்க்க

41. மெட்டுகளையுடைய மேலைத்தேய வாத்தியம்
(1) கிற்றார் (2) வீணை (3) வயலின் (4) பியானோ (5) ஸித்தார்

42. தாதரா என்ற தாளத்தின் இரண்டாம் பாகத்தைக் குறிப்பது

(1) DHI DHI NA
தி தி னா

(2) DHA DHA TIN
தா தா தின்

(3) DHA THU NA
தா து னா

(4) DHA DHIN NA
தா தின் னா

(5) DHA DHA DIN
தா தா தின்

• பின்வரும் ஸ்வரக்கோர்வைகளைக் கருத்திற் கொண்டு **43** தொடக்கம் **45** வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

ஸ் நீ த ப *த நி ஸ் ர்ீ நி *த நி ஸ்ா ;

43. மேற்கூறப்பட்ட ஸ்வர சஞ்சாரத்திற்குரிய இராகம்
(1) வசந்தா (2) சாவேரி (3) காம்போஜி
(4) பைரவி (5) ஹிந்துஸ்தான் பெஹாக்

44. மேற்குறித்த இராகத்தில் வரும் அந்நிய ஸ்வரம்
(1) சதுஸ்ருதி தைவதம் (2) கைசிகி நிஷாதம்
(3) சட்சுருதி தைவதம் (4) சுத்த தைவதம்
(5) காகலி நிஷாதம்

45. மேற்கூறப்பட்ட ஸ்வர சஞ்சாரத்தில் வரும் அட்சரங்களின் எண்ணிக்கை
(1) 16 (2) 17 (3) 18 (4) 19 (5) 20

46. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

• 1895ஆம் ஆண்டு பிறந்தவர்.
• இலங்கையில் புகழ்பூத்த வயலின் இசைக் கலைஞர்.
• ஸாரங்கி எனும் வாத்தியத்தை வாசிக்கும் ஆற்றல் பெற்றவர்.
• வாக்கேயகாரராகவும் விளங்கியவர்.

மேற்கூறப்பட்ட கூற்றுகளுக்குப் பொருத்தமானவர்
(1) என். கே. பத்மநாதன் (2) என். எஸ். உருத்திராபதி
(3) புத்துவாட்டி எஸ். என். சோமசுந்தரம் (4) பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர்
(5) வண்ணை ஆர். காமாட்சி சுந்தரம்

47. மனோதர்மத்திற்கு இடமளிக்கும் இசை வகைகள்
(1) கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை (2) ஹிந்துஸ்தானி இசை, ஐரோப்பிய இசை
(3) ஐரோப்பிய இசை, கர்நாடக இசை (4) ஐரோப்பிய இசை, பண்ணிசை
(5) நாட்டாரிசை, கர்நாடக இசை

48. கிளேவிகோர்ட் (Clavichord) என்னும் இசைக்கருவியை வாசிக்கும்போது ஐந்து விரல்களையும் பயன்படுத்தி வாத்தியத்தில் இசை கூட்டப்படும் முறையைப் பரிபூரணப்படுத்தியவர்
(1) பீதோவன் (2) பாக் (3) மொஸாட்
(4) அமிர் குஸ்ரு (5) பாத்கண்டே

49. முகவீணை என்ற இசைக்கருவியை அரங்கிற்கு உகந்தது என அறிமுகப்படுத்திய இலங்கைக் கலைஞர்
(1) புத்துவாட்டி எஸ். என். சோமசுந்தரம் (2) பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர்
(3) இசைப் புலவர் என். சண்முகரத்தினம் (4) என். கே. பத்மநாதன்
(5) பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை

50. கிரம சம்பூர்ண ஆரோகண-அவரோகண முறையுடன் கூடிய கனகாங்கி-ரத்னாங்கி மேளப் பட்டியலைக் கூறும் நூல்
(1) சதுர்த்தண்டிப் பிரகாசிகை (2) சங்கிரக சூடாமணி
(3) சங்கீத ரத்னாகரம் (4) அத்யாத விவேகம்
(5) சங்கீத சாராம்ருதம்

* * *

3074

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

**அறிவுறுத்தல்கள்:**

※ **பகுதி I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) கமகம் என்பதன் வரைவிலக்கணத்தைக் கூறுக.
(ii) சாரங்கதேவர் தம் நூலில் குறிப்பிட்டுள்ள 15 வகையான கமகங்களையும் குறிப்பிடுக.
(iii) தசவித கமகங்களின் பெயர்களைத் தந்து, அவற்றுள் **நான்கினை** உதாரணத்துடன் விளக்குக.

**2.** (i) தவில் வாத்தியத்துடன் இணைந்து வாசிக்கப்படும் மங்கள வாத்தியமான துளைவாத்தியம் யாது ?
(ii) அத்துளைவாத்தியத்தில் பிரசித்திபெற்ற ஈழத்துக் கலைஞர்கள் **இருவரினதும்** இந்தியக் கலைஞர்கள் **இருவரினதும்** பெயர்களைத் தருக.
(iii) மேற்குறித்த துளைவாத்தியத்தின் படத்தினை வரைந்து அதன் பாகங்களைக் குறிப்பிடுக.
(iv) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.
(v) இவ்வாத்தியத்தின் சிறப்பம்சங்கள் **இரண்டினைத்** தருக.

**3.** பாடத்திட்டத்திற்கமைவாக நீர் கற்ற ஆதிதாள தானவர்ணம் ஒன்றினை ஸ்வர ஸாகித்திய அமைப்பில் தாள, இசைக் குறியீடுகளைப் பயன்படுத்தி முழுமையாக எழுதுக. (இராகம், ஆரோகணம் - அவரோகணம், இயற்றியவர் பெயர் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.)

## பகுதி II

**4.** பின்வரும் இராகங்களில் இரண்டினைத் தெரிவுசெய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்.)
(i) பண் கௌசிகம் என அழைக்கப்படும் இராகம்
(ii) வசந்தா
(iii) ஹிந்துஸ்தானி இசையில் துர்க்கா என அழைக்கப்படும் இராகம்
(iv) ஆபோகி

**5.** (i) ஸ்வாதித்திருநாள் மகாராஜாவின் வாழ்க்கை வரலாற்றினை எழுதுக.
(ii) அவரது இசைப்பணியை விரிவாகத் தருக.
(iii) அவர் மக்களுக்கு ஆற்றிய பொதுப்பணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.
(iv) அவர் தனது உருப்படிகளில் கையாண்டுள்ள முத்திரைகள் **ஐந்தினைக்** குறிப்பிடுக.

**6.** பின்வரும் விடயங்கள் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
(i) கிரஹம் (எடுப்பு)
(ii) சம்வாதி ஸ்வரம்
(iii) தீப்சந்தி
(iv) ஒலியின் செறிவு

**7.** கீழே தரப்பட்டுள்ள இசை உருப்படிகளில் **இரண்டினைத்** தெரிவுசெய்து, அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக.
(i) சூளாதி
(ii) தில்லானா
(iii) ஜாவளி

**8.** 20 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த பிரபல்யமான வாய்ப்பாட்டு இசைக்கலைஞர்கள் **இருவரினது** வாழ்க்கைக் குறிப்புகளையும் இசைப் பணிகளையும் சுருக்கமாகத் தருக.

**அல்லது**

ஹிந்துஸ்தானி இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பாத்கண்டே அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் இசைக்காற்றிய தொண்டினையும் எழுதுக.

※ ※ ※